பெயரைப் போடவேண்டுமென்ற விதி இருந்தும், விதியினை மீறி இருக்கக்கூடிய அந்தத் தலைவர் மீது கடும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது,)

(ஏ) தகவல் கோருவதற்குப் பேரவைத் தலைவரின் முன் அனுமதி.

திரு. பொன் முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, ...(குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பு (குறுக்கீடு) திரு. பொன் முத்துராமலிங்கம், நீங்கள் அனுமதி கேட்கவில்லை. திரு. அ. ரகுமான்கான், நீங்கள் அனுமதி கேட்டீர்களா? (குறுக்கீடு) அவர்கள் எல்லோரும் 9.30 மணிக்கே வந்து என்னிடம் அனுமதி கேட்டார்கள், வினா எழுப்பப் போகிறோம் என்று. நீங்கள் எதைப்பற்றி வினா எழுப்பப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியாது. காலையில் சொல்லியிருப்பீர்களேயானால், நான் அனுமதித்து இருப்பேன். இன்று வந்து சொல்லுங்கள், நாளை காலை அனுமதிக்கிறேன், அமருங்கள்.

3. கவன ஈர்ப்பு.

(அ) மாதா பட்டணத்தில் பிற்பட்டோர் மாணவியருக்கான விடுதி துவங்க வேண்டியதன் அவசியம்.

*திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அம்பாசமுத்திரம் வட்டம், மாதாபட்டணம் ச.ச.வி. மேல்நிலைப்பள்ளியில் பிற்படுத்தப்பட்ட மாணவியர் தங்கி கல்வி பயில, மாணவியர் விடுதி ஆரம்பிக்க வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவர்-மாணவியருக்காக பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையால் நடத்தப்படும் 557 விடுதிகளில், திருநெல்வேலி மாவட்டத்தில் (புதிதாகப் பிரிக்கப்பட்டுள்ள சிதம்பரனார் மாவட்டம் உட்பட) 48 விடுதிகள் இயங்கி வருகின்றன.

2. ஆண்டுதோறும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவர்–மாணவியருக்காக புதிய விடுதிகள் திறப்பதை இரண்டாம் பகுதி திட்டமாக பரிசீலித்து, நிதி நிலைக்குழுவின் ஒப்புதலை பெற்றவுடன், அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர்களும் பொதுமக்கள், சட்டமன்றப் பேரவை மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கைகளின் பேரில் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவர்–மாணவியருக்காக புதிய விடுதிகள் திறப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநருக்கு அனுப்பிய முன் மொழிவுகளின் அடிப்படையில் புதிய விடுதிகள் திறப்பது குறித்து ஒருங்கிணைந்த முன்னுரிமைப்பட்டியலை பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் தன் பரிந்துரையுடன் அரசுக்கு அனுப்பியவுடன், புதிய விடுதிகள் திறக்க வேண்டிய இடங்கள் குறித்து அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டு வருகிறது.

3. சேரன்மகாதேவி அம்பாசமுத்திரம் வட்டம் மாதா பட்டணத்தில் ச.ச.வி. மேல்நிலைப்பள்ளியில் 250 பிற்படுத்தப் பட்டோர் வகுப்பு மாணவியர் பயில்கிறார்கள் என்றும், மாதா பட்டணத்தில் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவியர் விடுதி திறக்கலாம் என்றும் திருநெல்வேலி மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் நல அலுவலர் தெரிவித்துள்ளார். இவ்வூரில் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பு மாணவர்களுக்கென ஏற்கனவே ஒரு விடுதி இயங்கி வருகிறது, அதில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 50.

4. 1987–88-ம் ஆண்டில் இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் 15 பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் மாணவ–மாணவியருக்காக புதிய விடுதிகள் திறப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரிடமிருந்து ஒருங்கிணைந்த முன்னுரிமைப் பட்டியலைப் பெற்று புதிய விடுதிகள் திறக்கப்படும் இடங்கள் குறித்து அரசால் ஆணை வெளியிடப்படும். அவ்வமயம் மாதாபட்டணத்தில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியருக்கான விடுதி துவங்குவது பற்றி கருத்திற் கொள்ளப் படும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி ஆண்டிலேயே அந்த விடுதியை ஆரம்பிக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்து அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரமும் இந்த அறிக்கையிலே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய தொகுதியைப் பற்றி கேள்வி கேட்பதற்கு யாரும் விரும்புவது கிடையாது.